4 பக்கங்கள் தனிப்பிரதி 0—1—0 மலேயா, சிலோன் 6 சதம். REGD. NO. M. 4004

SAMARASAM வார வெளியீடு

# சமரசம்

ஆசிரியர்: S. Md. சுல்தான் பக்தாதி

கோர்வை 13 | திருச்சி, தி. வ. ஆண்டு 1982 சித்திரைத்திங்கள் 1-ம் நாள் (14—4—1951) சனிக்கிழமை | மணி 15

# திராவிட நாடு கேட்பது தவறா?

## ஆட்சிநடத்த யோக்யதையில்லாவிடில் வெளியேறிவிடுங்கள்!

[ கோவிந்தராசன் ]

'திராவிட நாடு என்றால் எது? எப்படியிருக்கும்?' என்றுகேளுங்கள். விளக்கியுள்ளோம், விளக்கிக்கொண்டிருக்கிறோம், இனியும் விளக்குகின்றோம். ஆனால், "திராவிடநாடு கேட்பதே தவறு" என்று கூற உங்களுக்கென்ன உரிமை இருக்கிறது? நாங்கள் திராவிடர்; திராவிடர் ஒன்றுகூடி திராவிடநாடு கேட்டால் அதைத்தடுக்க நீங்கள் யார்? ஏன் நீங்கள் திராவிட இயக்கத்துக்கு எதிர்ப்பு மகாநாடு நடத்தியதுபோல, சோஷலிஸ்டுகளுக்கு எதிர்ப்புமாநாடு நடத்தவில்லை? கம்யூனிஸ்டுகளை ஏன் எதிர்க்கவில்லை? மதச்சார்பற்ற சர்க்காரிலே மகாத்மாவைக் கொன்ற வெறியர்கள் நிறைந்த இந்து மகாசபை இருக்கவேண்டிய அவசியமென்ன? கூறமுடியுமா பதில்? எங்கள் குறிக்கோள் ஆரியத்தின் ஆணிவேர் களையப்படவேண்டுமென்பதே!

"தொழில் மந்திரியார் வந்தாரே அவரிடம் எங்களுக்குக் கட்டிக்கொள்ள கந்தை இல்லை, எங்கள் நாட்டு நெசவாளர்கள் நூலின்றித் தவிக்கின்றனர்; கருணை காட்டுங்கள் நூல் கொடுத்து உதவுங்கள் என்று கேட்பதுதானே?" என்று கேட்கப்பட்டது ஒரு கேள்வி. வெட்கமில்லை உங்களுக்கு. வட நாட்டான் தயவு தேவையில்லை — எதற்கெடுத்தாலும் டில்லி நோக்கிக் காவடி தூக்கிச்செல்வது கூடாது - வட நாட்டின் ஆதிக்கத்திலிருந்து தென்னாட்டைக் கைப்பற்றவேண்டும் என்றுதானே "திராவிட நாட்டைப் பிரி" எனகிறோம் நாங்கள். அது தெரிந்திருந்தும் வட நாட்டானிடம் மண்டியிடச் சொல்கின்றீர்களே - சிந்தையிலே தெளிவு இருந்தால் இந்தக் கேள்வி கேட்கப்படுமா? வளங்கொழித்த தென்னாட்டில், ஆடையைப்பற்றி உலகம் அறிந்திராத காலத்தில் பஞ்சாடையும், பட்டாடையும் உடுத்திக்கொண்டிருந்த மக்கள் வாழ்ந்த நாட்டில் ஆடைச்குப்பஞ்சம். நூலுக்குப்பஞ்சம் என்று அன்னியநாட்டானிடம் உதவி கோரச்சொல்கின்றீர்களே மானமிருக்கிறதா உங்களுக்கு? ஏன் நீங்கள் கேட்டீர்களே என்ன கிடைத்தது? நெசவாளர்களுக்கெல்லாம் நூல் கொடுத்துவிட்டீர்களா? அவர்களின் வறுமை தீர்ந்ததா? தந்தியடித்தோம் தடபுடல் செய்தோம் என்று பேச்சுப் பேசி பயன் என்ன? தந்தியடிக்கவும் மந்திரியார் வந்து செல்லவும் ஆகிய செலவுகளை மக்கள் மீது வரியாகச் சுமத்தியதுதானே கண்ட பலன்? உங்களால் முடியவில்லை என்றால் எங்களுக்கு ஆட்சிநடத்த யோக்யதை இல்லை என்று வெளியேறி விடுவது தானே புத்திசாலித்தனம்.

"புகார் பட்டணம் புகைந்து போனது எங்கள் காலத்திலே அல்ல; வெள்ளையன் காலத்தில், பம்பாய் பெரிய துறைமுகம் ஆனது எங்கள் காலத்தில் அல்ல வெள்ளையன் காலத்தில்" என்று பேச்சு வேகத்தில் பேசி விட்டீர்களே, அவர்கள் காலத்தில்தான் அப்படி ஆயிற்று உங்கள் காலத்தில் என்ன வாழ்கிறது? தென்னாட்டிற்கு என்று ஒரு நல்ல தொழிற்சாலை உண்டா? வேலையில்லாத் திண்டாட்டம் தீர அமைக்கும் தொழிற்சாலையெல்லாம் வடநாட்டில்தானே? தப்பித்தவறி ஒன்று இருந்தால் அது டாடாவுக்கும் பிர்லாவுக்கும் சொந்தமாக இருக்கிறது: தென்னாட்டிற்கென்று நீங்கள் எதைச்சாதித்தீர்கள்?

"திராவிட இயக்கத்தால் தமிழ் இலக்கியங்கள் அழிக்கப்படுகின்றன" என்று ஒரு அர்த்தமற்ற கூச்சல் கிளப்பப்பட்டது. ஆனால், நீங்கள் இன்று தமிழ் இலக்கியத்தைப்பேசும் அளவுக்கு தமிழ் இலக்கியங்களைப் பரப்பி, இலக்கிய உலகிலேயே ஒரு மறுமலர்ச்சி உண்டுபண்ணியது திராவிட இயக்கம்தான் என்பது மக்களுக்குத்தெரியும். ஏன்? நீங்கள் தான் மறுக்க முடியுமா? திராவிட இயக்கம் தோன்றுமுன் வள்ளுவனையும் அவன் வகுத்த குறளையும் அறிந்துகொண்டிருந்தவர்கள் நூற்றுக்கு எத்தனை பேர்? இளங்கோவையும் சிலப்பதிகாரத்தையும்பற்றி மக்கள் கேள்விப்பட்டதுண்டா? கம்பனைப் போற்றப்பட்ட அளவு வள்ளுவனைப் போற்றப்பட்டதா? பெரியபுராணத்திற்குக் கிடைத்த மதிப்புசிலப்பதிகாரத்துச்குக்கிடைத்ததா? சிலப்பதிகார மகாநாட்டைக் கற்பனை செய்தாவது பார்த்ததுண்டா? ஒரு வள்ளுவன் கழகம் தோற்றுவிக்கப்பட்டதுண்டா? கர்ணனின் கொடைத்தன்மையைப்பற்றித் தான் மக்களுக்குத் தெரிந்திருந்ததே ஒழிய; தன்வசமிருந்த முந்நூறூர்களையும் பரிசிலர்க்கீந்த பாரிவள்ளலைப்பற்றி எந்த அளவுக்கு அறிந்து கொண்டிருந்தார்கள் மக்கள்? பட்டியல் தருகிறோம். பகருங்கள் பதில்.

எது இலக்கியம்? இராமாயணமும் பெரியபுராணமும், மகாபாரதமுமா இலக்கியங்கள்? இலக்கிய வரிசையிலே சேர்க்கப்பட தகுதி உண்டா அவைகளுக்கு? இலக்கியத்திற்கு இலக்கணம் தெரியுமா உங்களுக்கு? கம்பன் கவித்திறமை மிக்கவன்தான் ஆனால். கவித்திறமை ஒன்றிற்காக அவன் இயற்றிய நூலுக்கு இலக்கியப் பெருமை தருவது எந்த நியதியைச் சாரும்? அதன்படி பார்த்தால்,

அத்தை மகள் ரெத்தினமே
அழகு செந்தேனே — என்னை
அலைய விட்டுப் போனியடி
ஒப்பந் தன்னுனே.

என்னும் இந்தப்பாட்டு கூட. கவித்திறமையில் சேர்க்கப்பட வேண்டியதுதானே? இதற்கும் இலக்கியப் பெருமை தரவேண்டியது தான் நியதியா? கூறுங்கள் தோழர்களே! ஷேக்ஸ்பியர், பெர்னட்ஷா போன்ற அறிஞர்களின் நூல்கள் தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டால், அவற்றை தமிழ் இலக்கிய வரிசையிலே சேர்த்துக்கொள்வீர்களா? மூலஆசிரியரின் கருத்துக்களை விடச் சிறந்த கருத்துக்கள் மொழிபெயர்ப்பு ஆசிரியரால் கையாளப்பட்டிருக்கலாம் ஆனால். அது மொழிபெயர்ப்பு நூலாகத்தானே கருதப்படும்? அவற்றைத் தமிழ் இலக்கியங்களோடு சேர்த்துக்கொள்ள எந்தத் தமிழனாவது ஒப்புக்கொள்வானா? அப்படி சேர்த்துக்கொள்வது தமிழ் மொழிக்கே பெரிய இழுக்குஎன்பதை யாராவது மறுக்கமுடியுமா? வால்மீகியின் நூலை மொழிபெயர்த்த கம்பனுக்கு மட்டும் இலக்கியவரிசையிலே இடந்தரப்படுவது நேர்மையா? கூறுங்கள் தோழர்களே! கம்பராமாயணம் தமிழ் இலக்கியமா? மொழிபெயர்ப்பு நூல்தானே? அந்நியநாட்டு இலக்கியத்தை தங்களுடையதென்று கூறும் அளவுக்கு மக்களை வசப்படுத்தியது கம்பனின் கவித்திறமையன்றி வேறெதையும் கூறமுடியுமா?

தமிழ்ப்பண்புபற்றி பேசப்பட்டது ஒரு சிலரால். "திராவிட இயக்கத்தினருக்கு தமிழ்ப்பண்பு தெரியாது" இப்படி ஒரு பயித்தியக்காரத்தனமான பேச்சு. எது தமிழ்ப் பண்பு என்று உங்கள் எதிர்ப்புக் குழுவைச் சேர்ந்த எவருக்காவது தெரியுமா? அவன் பார்ப்பான், இவன் பறையன் அவன் உயர்ந்தவன், இவன் தாழ்ந்தவன்; அவர்கள் பூதேவர்கள், இவர்கள் பூசுரர்கள் என்ற பாகுபாட்டைத் தருவது தமிழ்ப் பண்பா? ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று வரையறுத்துக் கூறுவது தமிழ்ப் பண்பா? நாடு, நகரம், பட்டி, தொட்டி அனைத்தும் சிரிக்கிறது உங்கள் அர்த்தமற்ற பிதற்றலைக் கேட்டு!

இது போன்ற இன்னும் எத்தனை மகாநாடு வேண்டுமானாலும் நடத்துங்கள் நாங்கள் தளர மாட்டோம். அன்று முதல் இன்று வரை எதிர்ப்பிலே வளர்ந்தது எங்கள் இயக்கம். கம்பன் விழா நடத்திக் கொண்டிருந்த உங்களை திராவிட இயக்க எதிர்ப்பு மகாநாடு நடத்தும் அளவுக்கு கொண்டுவந்து விட்டிருக்கிறது எங்கள் இயக்கம். ஆச்சாரியாரையும், நேருவையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்த உங்களை எங்கள் அண்ணாவையும், பெரியாரையும் பற்றிப் பேசும் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது எங்கள் இயக்கம். இவைகள் போதுமே எங்கள் இயக்கத்தின் வளர்ச்சியைக் காட்ட. "திராவிட இயக்கத்தின் வரலாறு மக்களுக்கு விளக்கப்பட வேண்டும்" என்றீர்கள் உங்களுக்குமுன் நாங்கள் விளக்கியுள்ளோம் நல்லமுறையிலே இன்று எங்கள் இயக்கத்தைப்பற்றி நன்றாக அறிந்திருப்பவர்கள் 100க்கு 75 பேர் என்று துணிந்து கூறலாம். மேலும் நீங்கள் எங்கள் இயக்கவரலாற்றை மக்களிடையே பரப்பும் பணியை ஏற்றுக்கொள்வதற்காக வணக்கம் செலுத்துகின்றோம் தோழர்களே! வணக்கம் செலுத்துகின்றோம்.

ஆனால், ஐக்கியநாட்டு மன்றத்தின் அங்கத்தினர் வரிசையிலே "திராவிடநாடு" என்ற பெயர்

(3-ம் பக்கம் பார்க்க)

## "சமரசம்"

(சந்தா விவரம்)

உள் நாடு.

| | |
|---|---|
| 1-வருடம் | ரூ. 4—0—0 |
| 6-மாதம் | 2—2—0 |

இலங்கை.

| | |
|---|---|
| 1-வருடம் | ரூ. 5—0—0 |
| 6-மாதம் | 2—8—0 |

# 'சமரசம்'

1951-ம் ஏப்ரல்-மீ 14-உ


## ராஜன்பாபு கவனிப்பாரா?

டாக்டர் ராஜன்பாபு அவர்களைக் குடியரசுத் தலைவர் என்ற மரியாதைக்காக, முஸ்லிம் கல்விச் சங்கம் அவரை வரவேற்று உபசரித்தது. அவர் அதற்கு நன்றி செலுத்துமுகத்தான் முஸ்லிம்களைக் கிண்டல் செய்திருப்பது குடியரசுத்தலைவரிடத்திலிருக்கும் வேற்றுமை மனப்பான்மையைத்தான் காட்டுகிறது

டாக்டர் ராஜன்பாபு அவர்கள், முஸ்லிம்கள் இந்த நாட்டைத் தங்கள் நாடாகக்கருத வேண்டும் எனக்கூறுகிறார். இந்த நாட்டை அந்நியநாடு என்று யாராவது கூறுபவர்கள் உண்டா? இதுவரை முஸ்லிம்கள் எங்கெங்கு வசித்து வருகிறார்களோ அவற்றையெல்லாம் அவர்கள் தங்கள் தாய் நாடாகவே கருதி எல்லாத் தியாகங்களும் செய்து வந்திருக்கின்றனர். அப்படியிருக்க இந்த நாட்டிலே பிறந்து, வாழ்ந்துவரும் முஸ்லிம்களிடம் குடியாட்சித் தலைவர் இப்படிக்கூறுவாரானால் அவர் தம்மிடமுள்ள வேற்றுமை உணர்ச்சியை வெளிக்காட்டியிருப்பதாகவே நாம் கருத வேண்டியிருக்கிறது

முஸ்லிம்கள் இந்த நாட்டில் எண்ணற்ற தியாகங்கள் செய்து, கலை, கல்வி, பொருளாதாரம் முதலியவற்றைப்பெருக்கி வந்தது அவர்கள் ஆட்சியில் அமைந்த உயரிய சிற்பங்கள், கட்டிடங்கள் பொது ஸ்தாபனங்கள் முதலியவைகளே எடுத்துக்காட்டாகும்.

பிரித்தாளும் பிரிட்டன் தந்திரமாக இந்நாட்டிற்குள் புகுந்து, வேற்றுமைக் குணமுள்ள இந்துப் பிரபலஸ்தர்களைக்கைக்குள் போட்டுக்கொண்டு முட்டிவிட்டு, அரசாங்கத்தைக் கைக்கொண்டதிலிருந்து முஸ்லிம்கள் இந்நாட்டை விடுவிக்க படாதபாடுபட்டு வந்ததும், அடிக்கடி துரோகிகள் கூடி முஸ்லிம்களைக் காட்டிக் கொடுத்ததும் அதனால் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள், படுகொலைப் புரியப்பட்டதும் சரித்திரம் கூறும் உண்மையல்லவா?

இறுதியாக காங்கிரசு போராட்டத்தில் முஸ்லிம்கள் எல்லாத் துறையிலும் எவரையும்விடச் சிறந்த முறையில் தியாகம் புரிந்ததில் ஆயிரக்கணக்கில் தூக்கிலிடப்பட்டும், குண்டுக்கிரையாகியும், உத்தியோகம் தொழில், சொத்து யாவற்றையும் துறந்துவிட்டு வேற்றுநாடு சென்று கிளர்ச்சி செய்ததையும் இந்திய சரித்திரம் எடுத்துக்காட்டும், எல்லாவற்றிலும் துன்பமுற்றுதவித்தசமயம் முஸ்லிம்கள் சோர்வுற்றிருக்கின்றனர் என்று பண்டித மதன் மாளவியா, பண்டித மோதிலால் நேரு, லாலா லஜபதிராய் இந்த ஜனாதிபதி ராஜன்பாபும் கூடத்தான் சேர்ந்து முஸ்லிம்களுக்கு விரோதமாக இந்துமகாசபையை அமைத்து, முஸ்லிம்களுக்கு மாற்றமாகப் பிரசாரம் செய்து அவர்களின் சமயம், கலை, நாகரீகம் யாவற்றையும் நசுக்கப் பிரயத்தனப்பட்டது உலகறிந்த உண்மையல்லவா?

முஸ்லிம்கள் யாவரையும் சமமாகவும், சகோதரராகவும் பாவித்து வந்ததும், வருவதும் கண்கூடு முஸ்லிம்கள் நாட்டுப் பற்றில் மிக்க அக்கரை கொண்டவர்கள். பிரிட்டன் தலைநகரிலே ஒரு முஸ்லிம் வீரர் சுதந்திரம் இன்றி நான் ஊர் திரும்பேன் என்று உயிரையே லண்டன்மாநகரத்தில் துறந்தார்! எப்படி முஸ்லிம்களின் தாய்நாட்டுப்பற்று? நம் குடியரசுத்தலைவர் அவர்கள் இந்த வீர சமுதாயத்தை சகோதரர்களாகப் பாவியுங்கள் என்று இந்துக்களைப் பார்த்து கூறியிருக்கவேண்டுமேயன்றி முஸ்லிம்களைத் தங்கள் நாடாகக் கருதுங்கள் இந்த நாட்டை என்று கூறியிருத்தல் கூடாது.

முஸ்லிம்கள் முஸ்லிம் லீக் மூலம் பாக்கிஸ்தான் பிரிவினை கோரியது இந்நாட்டின் விடுதலை கருதியேதான். எத்தனையோ திட்டங்கள் ஒத்துழைப்பிற்குச் சமர்ப்பித்தும் இந்துக்கள் ஏற்கவில்லை. கடைசியில் இடைக்கால சர்க்காரில் முஸ்லிம் லீக் மந்திரியின் ஆட்சி முறையையும், திறமையையும் கண்டு தங்கள் பாச்சா பலிக்காது என்று தானே காங்கிரஸார் பிரிவினையை உடனே செய்யவும் அதிலும் வங்காளத்தையும், பஞ்சாபையுங்கூட பிரிக்க முற்பட்டனர்?

பிரிந்த பாக்கிஸ்தான் திறமையாகவும், சுபிட்சமாகவும் இருப்பது கண்டு முஸ்லிம்கள் மகிழ்கின்றனர். ஏன்? பிரித்துக்கொடுத்த இளையவன் நன்றாக இருக்கட்டும் என்றுதான் பாக்கிஸ்தானில் இந்துக்கள் அதிகமிருக்கிறார்களென்று விரோதிகளாகப் பாவிப்பது முஸ்லிம்கள் குற்றமல்ல.

இந்துக்களின் எண்ணப்படி முஸ்லிம்கள் நடக்கவில்லையே என்று இங்கு வதியும் முஸ்லிம்கள் ஏச்சுக்கும், பேச்சுக்கும், பழிக்கும் ஆளாகிக் கொண்டு எண்ணற்ற துன்பங்களையும், பசி, பட்டினிகளையும் அனுபவித்துக்கொண்டு ஆண்டவன் வழி காட்டுவான் என்று தான் நம்பியிருக்கின்றனர்.

இந்துக்கள் எத்தனையோ பேர்கள் இந்திய விடுதலைக்கே விரோதமாக வெள்ளையனின் கையாளாக இருந்தனர் அவர்களெல்லாம் இன்று தேசபக்தர்களாகவும் உத்தியோகத்தில் பெரும் பதவியும் வகித்து வருகின்றனர். அவர்களைப் பார்த்து நம் ஜனாதிபதி ஒரு வார்த்தை கூட ஏளனமாகக் கூறவில்லை.

அண்டையிலிருக்கும் நேபாளம் இந்துக்கள் நிறைந்த நாடாக இருப்பதால் அதை ஆதரிக்கும் மக்களை நல்லவர்களென்றுபுகழ்வதும், நம்முடன் அண்ணன் தம்பி போல் இருந்து பிரிந்த பாக்கிஸ்தானை வெறுப்பதும் ஏன்?

பாக்கிஸ்தான் மக்களுடன் அனுதாபம் கொள்ளுவது பாவம் என்று எண்ணுவது பைத்தியக்காரத்தனம் என்பதையும், தேசத்துரோகமாகும் என்பதையும் ஜனாதிபதி ராஜன்பாபு கருத்தில் வைத்து முஸ்லிம்களும் நம் சகோதரர்கள் தான் என்று தங்கள் வர்க்கத்தாருக்குப் புத்தி கூறும்படி வேண்டுகிறோம்.

---

## ஏஜண்டுகளுக்கு அறிவிப்பு

இதுவரை, பில்படி தொகை அனுப்பி வைக்காத ஏஜண்டுகளுக்கு அடுத்த வாரம் முதல் "சமரசம்" அனுப்பப் படமாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர், "சமரசம்".

## நமது சுதந்தர சர்க்காரில்!

(1) பிரிட்டிஷ் சர்க்கார் நம்மை அடிமைகளாக்கி வைத்திருந்தது. சுதந்தர சர்க்கார் நம்மைச் சுதந்தர புருஷர்களாக்கி விட்டது. முன்பு சர்க்கார் ஆபீஸ்களில் ஒரு காரியம் ஆகவேண்டியிருந்தால் வாரக்கணக்கில் மக்கள் நடந்து திரிய வேண்டியிருந்தது. இப்போதோ சிறிது ரூபாய் செலவு செய்தவுடன் காரியம் சுலபமாக முடிந்து விடுகிறது!

(2) இரண்டு ரூபாய்க்கு, முன்பு, தான்யம் வாங்க வேண்டுமானால் அதைத் தூக்கிச் செல்ல ஓர் சுமையாள் தேவையாக இருந்தது இப்போது அக்கஷ்டம் நீங்கி நாமே மற்றவர்கள் அறியாதபடி மடியில் கட்டி வந்து விடலாம்.

(3) முன் மழைகாலம் ஏற்பட்டால் ஏழைமக்கள் (வீடற்றவர்கள்) தெருக்களிலும், பிளாட் பாரங்களிலும் கூட படுக்க இடமின்றி இரவெல்லாம் கண் விழித்துக் கஷ்டப்பட்டார்கள். பணமுள்ளவர்கள் பத்துப் பன்னிரண்டு ரூபாய் செலவு செய்து குடை வாங்கி வைக்க வேண்டிய அவசியம் இருந்தது. ஆனால், நமது சுதந்தர சர்க்காரில் ஏழைகளும், பணக்காரர்களும் மழையின் கஷ்டத்தை விட்டு நீக்கப்பட்டு விட்டார்கள்.

(4) முன்பு, தென்னைமரப் பனைமரம், ஈச்சமரம், பெண்கள் எல்லோரும் அடிமைகளாகவும், கஷ்டப்படக் கூடியவர்களாகவுமிருந்தனர். நமது சுதந்தர சர்க்கார் ஏற்பட்ட பின்னர் மரங்களுக்கும், பெண்களுக்கும் விடுதலை கிடைத்து விட்டது.

(5) நாம் நமது சர்க்காரை வாழ்த்தாமல் இருக்க முடியாது. ஏனெனில் ஒவ்வொரு காரியத்தையும் சாதித்தே வருகின்றார்கள். அதில் முக்கியமானது சுயதேவைப் பூர்த்தி மக்கள் மடிந்தாலும் பரவாயில்லை. சுயதேவைப் பூர்த்தித் திட்டத்தை நிறைவேற்றி விடுவோம் என்று பிடிவாதமாக இருக்கும் சர்க்காரைக் குறை கூற யாரால் முடியும்?

---


## "நம் நாடு"

(வார இதழ்)

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை!

| | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ | 3 | 0 | 0 |
| ஆறுமாத ,, | ,, | 1 | 8 | 0 |
| தனி இதழ் | ,, | 0 | 1 | 0 |

விவரங்கட்கு:-
"நம் நாடு" நிலையம், திருச்சி.

# கேட்டுப் பாருங்கள்.

"பறவை அரசு"

அண்ணா அவர்களைத் தென்னாட்டு பர்னாட்ஷா என்று அவர் சிஷ்யர்கள் கூறுவதாக மக்கு மன்றம் கூறுகிறதே இது உண்மையா?

**—K. A. வஹாப், திருச்சி.**

அண்ணாவின் சிஷ்யர்கள் மட்டுமா அண்ணாவை தென்னாட்டு பர்னாட்ஷா என்று கூறுகிறார்கள்? பிரபல காங்கிரஸ் வாதி "கல்கி" ஆசிரியர் ரா கிருஷ்ணமூர்த்தி அவர்களுமல்லவா அண்ணாவை தென்னாட்டு பர்னாட்ஷா என்று புகழ்ந்திருக்கிறார்! கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?

* * *

'சாவமணி' ஏட்டிலே சதா அண்ணா அவர்களைத் தூற்றும் வாலறுந்த பாரதிப் பயலுக்கு சமரசத்திலே மறுப்பு எழுதப்பட்டிருந்ததே அதற்கு அவன் ஏன் மறுப்பு எழுதவில்லை?

**—M வாசு, திருச்சி.**

அவனுக்கு நெஞ்சு எத்தனை? குடல் எத்தனை? அவன் சரியான ஆம்பளையாக இருந்தால்தானே மறுப்பு எழுதுவான்? அவன்தான் அசல் ஒண்ணாம் நம்பர் டாபர்மாமா பேடிப் பயலாச்சே!

* * *

தி மு. கழகத்துக்கு கோவை மில் முதலாளிகள் பண உதவி செய்வதாகக் கூறப்படுவது உண்மையா?

**—மக்குமன்றம், சென்னை**

முன்னேறும் கழகத்தை நோக்கி மேலும் முன்னேற்றமடைய பண உதவி செய்கிறார்கள். எதிர்ப்பு நாடகம் நடத்த உங்களைப்போல் துட்டுப் பிச்சைக் கேட்டுத்திரியவில்லையே?

* * *

இம் மாதம் முதல் தேதியன்று திருச்சியில் நடைபெற்ற உழவர் மாநாட்டிலும், முனிசிபல் வரவேற்பிலும் கலந்து கொண்ட அண்ணா அவர்களின் பெயரை 'விடுதலை' இருட்டடிப்பு வேலை செய்திருக்கிறதே அது ஏன்?

**—M. ராசு, சேலம்.**

திராவிடக் கழகத்தை விட்டுப் பிரிந்து விட்டாரே என்ற ஆத்திரத்தை வைத்துக் கொண்டிருக்கலாம்!

திராவிடர்கள் கற்பைக் கெடுப்பவர்கள் என்று காராமணியார் கூறுகிறாரே இது உண்மையா?

**—S. V. வேலு, சேலம்.**

எந்தத் திராவிடர்கள் எங்கெங்கு கற்பைக் கெடுத்துவிட்டார்களாம்? முருகன் கோவிலிலே பைரவர் நிர்வாணமாக நிற்கிறாரே, அதை நம் பெண்மக்கள் பார்த்துக் கும்பிடுகிறார்களே, இதனால் கற்பு வளருமாக்கும்?

* * *

குடியாட்சித் தலைவர் ராஜேந்திர பிரசாத், மத்திய ஆட்சியிலிருந்து துண்டித்து விலகிக் கொள்ளும் கிளர்ச்சியை முளையிலேயே கெல்லி யெறியவேண்டும் என்று கூறியிருக்கிறாரே அது ஏன்?

**—N. பிரகாசம், திண்டுக்கல்.**

அவரையே கிலி கொள்ளும்படிச் செய்துவிட்டது தென்னாட்டுப் பெரும் பிரச்னையான திராவிட நாட்டுப் பிரிவினை!

* * *

தொங்கு மீசை மாவீரர் என்றால் அது யார்?

**டி. பரமன், சென்னை.**

அவர்தான் நம்மதிப்புக்குரிய காராமணிக் கங்காணியார்.

* * *

தமிழ்ப்புலவனுக்கு 'கல்தா கொடுக்க வேண்டும் என்று சின்ன அண்ணாமலையார் கூறியிருப்பது உண்மையா? தங்கள் கருத்தென்ன?

**—V. P. சாமி. ஈரோடு**

சின்னதுகளுக்குப் புத்தி சின்னதாகத்தானே இருக்கும்? முதலில் சின்னதுக்கு தமிழ் நாட்டுப் பெருங்குடி மக்கள் 'கல்தா' கொடுக்கப் போகிறார்கள் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறது இது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்படும்வரை — உலக நாடுகளின் வரலாற்று நூலிலே திராவிட நாட்டுக்கென்று ஒரு பகுதி ஒதுக்கப்படும்வரை — நில நூல் வல்லார்களால் திராவிடநாட்டுக்குரிய எல்லைக்கோடு இந்திய படத்தில் வரையப்படும்வரை — பள்ளி மாணவர்களுக்குரிய தேசப்படப் புத்தகத்தில் திராவிட நாட்டின் படம் சேர்க்கப்படும்வரை திராவிட இயக்கம் தளர்ச்சியடையாது — தன் வேலைத்திட்டங்களை தள்ளிவைக்காது முன்னேற்றப் பாதையை விட்டு ஒரு கணம் கூட வழுவி நடக்காது என்பதை மட்டும் நினைவிலிறுத்திக்கொண்டு எத்தனை மகாநாடுகள் வேண்டுமானாலும் நடத்துங்கள். உங்கள் செயல் எதுவாயினும் சரி வரவேற்கின்றோம்

## "ஷாஜஹான்"

10-4-51 திருச்சி கலெக்டர் முன்னிலையில் "ஷாஜஹான்" என்னும் மாதம் இருமுறை பத்திரிகைக்கு ஜனாப் S. B. N. முகம்மது ஹனீப் (மதனீ) அவர்கள் வெளியிடுபவராகவும், ஜனாப் T. S. A. ரசூல் அவர்கள் ஆசிரியராகவும் பதிவு செய்து கொண்டனர். பத்திரிகை, மே மாதம் முதல் வெளிவருமெனத் தெரிகிறது

## அண்ணாவும் சினிமா நடிகைகளும்!

அண்ணா அவர்களின் காலை அடிக்கடிக் கழுவிக் குடிக்கும் அயோக்கிய சிகாமணி, வாலறுந்த டாரதிப்பயல் வேலையெல்லாம் சினிமாநடிகைகளின் பெயர்களையும், அண்ணா அவர்களின் பெயரையும் பத்தி பத்தியாகப் பத்திரிகையில் எழுதி வயிறு கழுவுவதுதான்!

அண்ணா அவர்களுக்கு பெண்கள் பார்த்து செலக்ட் செய்வதுதான சின்நாட்களாக இந்த சில்லு வண்டுப் பயலுக்குப் பெரும் பணியாகி விட்டது. இந்த மானங்கெட்ட மடையன எழுதும் யோக்யதைக்கு மறுப்பு எழுத நமக்குப் பயமாக இருக்கிறதாம இந்த மூணும் போன முட்டாள் பயல்மீது மானநஷ்ட வழக்குத் தொடர்ந்து கேஸ் நடந்தால், தன்னுடைய நாற்றமெடுத்த சண்டியேடு இன்னும் கொஞ்சம் பேராகி, தன்னுடைய ஈன வயிற்றை உப்ப வைத்துக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது இந்த ஏமாந்த முண்டம்!

அண்ணா அவர்களுக்கு இயக்கப்பணி புரிவதற்கே நேரமில்லாது திண்டாடும்போது, இந்த மூணும் விற்ற முடிச்சவிழ்க்கிக் கழுதையிடம் கோர்ட்டுக்கு அலைந்து கொண்டிருக்க முடியுமா? ஒன்றுமில்லாத இந்த சோம்பேறிக் கழுதைதான் கண்ட கண்ட இடத்தில் வாய் வைத்துக் கொண்டு டாபர் மாமா வேலை செய்து கொண்டு திரிகிறது. வேறு வேலை இதற்கு?

சினிமா நடிகைகளுடன் அண்ணா அவர்கள் பேசினால் என்னவாம்? அவர்களுடன் காரில் சென்றால் என்னவாம்? இந்தக் கபோதிப் பயல் தன்னுடைய தங்கையுடன் காரில் சென்றால் நாம் இவன்மீது சந்தேகப் படுவதா? இது தெரியவில்லையே இந்த மட்டிப் பயலுக்கு? அப்படியே சினிமா நடிகைகள் அண்ணா அவர்களை விரும்புகிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அந்த நிலை இந்தத் தட்டுக்கெட்ட தறுதலைப் பயலுக்கு ஏற்படவில்லையென்றுதானே இப்படித் தம்பட்டமடித்துக் கொண்டு திரிகிறான்? இந்த பாரத நாட்டு மக்கள் அனைவரும் சகோதரர்களே என்று விரிந்த மனப்பான்மை பேசித் திரியும் தேசியக் குஞ்சுக்கு ஏன் இந்த குறுகிய புத்தி? இதிலிருந்து விளங்கி விட்டதல்லவா இந்தப் பயல்களின் பேச்சொன்று செயலொன்று என்று.

ஆகவே, திராவிட மக்கள் இந்தத் தட்டுக்கெட்ட தறுதலைப் பயல்களின் தப்புப் பிரசாரத்தைக் கண்டு ஏமாறுபவர்களல்ல. சூரியனைப் பார்த்து நாய் குரைத்ததைததான் ஒக்கும் இந்த வாலறுந்த நாயின் ஓலமும் என்பதை எச்சரிக்கிறேன். (சாட்டை)

## நீங்கள் உபயோகித்தீர்களா?




## இந்து மத போர்டு தலைவர் கவனிப்பாரா?

மணப்பாறை தேவஸ்தான நிர்வாகம் ஊழல் மயமாகி விட்டது தயவு தாட்சண்யத்துக்காக தனக்கு வேண்டியவர்களை தேவஸ்தான நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுத்து விடுகின்றனர். கோவிலில் நடைபெறும் காரியங்கள் ஒழுங்காக நடைபெறுவதில்லை வீண் செலவுகள் செய்யப்படுகிறது. ஐந்து ரூபாய் செலவை ஐம்பது ரூபாயாக வவுச்சர் எழுதும் திறமையில்தான் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள்.

ஆகையால், நிர்வாகத்தைத் திறம்பட நடத்தும் ஆற்றலும் அனுபவமுடையவர்களை நியமித்து ஆலய காரியங்கள் சரிவர நடைபெற்று வர இந்து மத போர்டு தலைவர்கள் கவனிப்பார்களாக.

இப்படிக்கு,
பொ. அடைக்கவண்டன்,
நா கறுப்புடையார்,
மு. மாச்சி செட்டி
மணப்பாறை

## அண்ணாவின் அறிவீனம்!

அண்ணாவின் அறிவீனம் என்று மகுடமிட்டிருக்கும் மட்டரக மூளையே கேள்!

இந்தியை நுழைய விட்டு, கன்னித்தமிழைக் கருவறுக்க சூழ்ச்சி செய்த போது, தாலமுத்து — நடராசன்களைக் காவு கொடுத்து தானும் சிறை புகுந்த சிங்கம் அண்ணா அவர்கள் அறிவீனரா?

தமிழ்மொழிவளர வேண்டும், தமிழ்நாடு யாருக்கும் அடிமை நாடாக இருக்கக்கூடாது, தமிழ் அமிழ்தினும் இனிது என்று வாயளவிலே — ஏட்டளவிலே பேசி, எழுதிவிட்டு தமிழ்மொழிக்கு ஆபத்து என்று தெரிந்தவுடன் வாய் பொத்திக் கை கட்டி அரசாங்கத்திடம் நல்ல பிள்ளையாக நடந்து கொண்டதுகள் அறிவிலிகளா?

தாய்மொழி காக்க வெஞ்சமர் புரிந்து சிறையிலே உயிர் விடத் தயார் என்று முழக்கமிட்ட அண்ணா அவர்கள் அறிவீனரா?

சிறையிலே உயிர் விடுவேன் என்று உறுதி கூறிவிட்டு சட்டசபை முன்னால் சத்தம் போட்டவுடன் படுத்துக் கொண்டதுகள் அறிவிலிகளா?

கர்ப்பிணியைக் கலங்கவிட்டு, இயக்க மணிகளுக்கு இடுக்கண் விளைவித்தபோதும் கலங்காது உரிமைப் போர் நடத்திய உத்தமர் அண்ணா அறிவிலியா?

'தலைநகரைத் தலை கொடுத்தேனும் காப்பேன்' என ஓட்டை முரசை அடித்துக் கொண்டு வடவருக்கு வால் பிடித்துக் கொண்டு திரியும் வக்கிரங்கள் அறிவிலிகளா?

'தமிழ்நாடு தமிழருக்கே!' என்று உரிமைப் போர் தொடங்கிய அண்ணா அவர்கள் அறிவிலியா?

தமிழ்நாடு தனித்தியங்க வேண்டுமென சவுடால் பேசிவிட்டு, எலி வளை எலிகளுக்கே என்று எகத்தாளம் பாடியதுகள் அறிவிலிகளா?

சுரண்டிப் பிழைக்கும் வடவர்கள் உறவு நமக்குத் தேவையில்லை என்று வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மறியல் செய்பவர்கள் அறிவிலிகளா?

சௌகார் பேட்டையில் வடவர்கள் திண்டுகளில் சாய்ந்

## மத்திய சர்க்கார் ஒழிப்பு நாள் ஏன்?

"வடநாட்டுக் காரர்கள் மத்திய சர்க்கார் என்கிற திரையின் மூலம் இந்த திராவிட நாட்டை அடிமைப்படுத்தி ஏகாதிபத்திய ஆட்சியாய் ஆளுகிறார்கள். இந்த நாட்டுச் செல்வத்தைச் சுரண்டிச் செல்லுகிறார்கள். அவர்களுடைய ஆட்சியிலேயிருந்தும், சுரண்டலிலேயிருந்தும் இந்த நாட்டு திராவிட மக்கள் விடுதலை பெற வேண்டும் என்பதற்கு ஆகவும், வட நாட்டுக் காரர்களுடைய ஆட்சியை நாம் எதிர்க்கிறோம் என்பதற்கு அறிகுறியாகவும் மத்திய சர்க்கார் ஒழிப்பு நாள் என்பதாக ஒருநாள் விரைவில் குறிப்பிட்டு, அந்த நாளை நாடெங்கும் கொண்டாட வேண்டும்."

— பெரியார் ஈ. வெ. ரா.

---

திருக்கை தொடக்கோடியில் தமிழன் கையில் திருவோடு எடுத்துக்கொண்டு பிச்சை எடுக்கிறான் என்று ஓட்டை முரசிலே ஓலம் விட்டுவிட்டு, இன்று மார்வாரிகளிடம் மண்டியிட்டு தன்மானத்தை அடகு வைத்து பிச்சைக்காசு வாங்கி எதிர்ப்பு மாநாடு நடத்தியதுகள் அறிவிலிகளா?

நூலில்லாது திண்டாடி நித்தம் செத்துக் கொண்டிருக்கும் நெசவுத் தொழிலாளருக்கோர் வழி செய்தாக வேண்டுமென்னும் அண்ணா அவர்கள் அறிவிலியா?

வெளி நாட்டுக்கு நூலை ஏற்றுமதி செய்து விட்டு உள்நாட்டுத் தொழிலாளர்களைப் பட்டினி போட்டு சாகடிக்கும் டாமோக்ரதமர்கள் அறிவிலிகளா?

பகுத்தறிவுப் பாதையைக் காட்டி பக்குவமாக வழி வகை தேடும் அண்ணா அறிவிலியா?

சாவுக்குழியை நோக்கி சகதியில் செல்லும் சழக்கர்கள் அறிவிலிகளா?

அறிஞர் அண்ணா அவர்களைப்பற்றி அர்த்தமில்லாது தூற்றித் திரியும் அசடுகளே அறிவிலிகள் யார் என்பதைப் புரிந்து கொண்டீர்களா?

— இரத்தினகாந்தன்.

இலங்கையில் இணையற்று விளங்கி வெற்றிக்கொடி நாட்டிவரும்

BEWARE OF IMITATION — STEAM JADE — REGD. — IMITATION — N.B.A.C.

903 ஸ்டீம் பீடிகள்

903 தங்கக்குதிரை சுருட்டுகள்

எங்கும் தனது இனிய மணமும், சிறந்த குணமும், உயர்ந்த பண்பையும் விளக்கி வருகிறது

வாங்கி உபயோகியுங்கள்! எங்கும் கிடைக்கும்.

N. B. அப்துல் கபூர், பாலக்கரை, திருச்சி.

E. A. L.

சந்தனாதி தைலம்

வாசனை ஊதுபத்திகள்

கண்ணுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும் அதியற்புத தைலம்.
இனிய மணத்தை வீசும் இணையற்ற பத்திகள்
இன்றே உபயோகித்துப் பாருங்கள்!
E. அப்துல் லத்தீப் சாயபு, பாலக்கரை, திருச்சி

மனிதனுக்கு மனிதன் போக்கு வித்தியாசமுண்டு
வட்டாரத்திற்கு வட்டாரம் மொழி மாறுபடுவதுண்டு
ஊருக்கு ஊர் உடை புதுமையாவதுண்டு!
இவ்வளவு மாறுபாடடையும் மக்களை நொடிப்பொழுதிலே ஒரே ஒற்றுமைக் கயிற்றிலே பிணைத்து விடுகிறது

ஸ்டார் புகையிலை
ஸ்டார் புகையிலை கம்பெனி — மார்க் — ஸ்டார் புகையிலை — TRADE MARK — சிவபுரி — புதுக்கோட்டை

இதனை உபயோகிப்பதில் மக்கள் தங்களின் இனம், மொழி வித்தியாசங்களைக் காட்டிக்கொள்வதில்லை. நமது நாட்டின் இலட்சியமும், ஒற்றுமை; ஸ்டார் புகையிலையின் குறிக்கோளும் ஒற்றுமைதான்!

தயாரிப்பவர்கள்:
மீ. ந. அ. செய்யது இப்ராம்ஸா & சன்ஸ்.,
புதுக்கோட்டை

துணுக்கு

### தோஷமில்லையா?

**தாயார்:** — (மகனைப்பார்த்து) ஏண்டா குறத்தியை உள்ளே அழைத்துக் கொண்டு வாரியே! தோஷமில்லையாடா?

**மகன்:** — ஏம்மா நம்ப சுப்ரமணியர் சாமிக்குப் பக்கத்திலே வள்ளியை வச்சிருக்கிறாரே அது தோஷமில்லையா?

— ச. இராமநாதன், காடத்தாம்பட்டி

வியாபாரம் பெருக
சமரசத்தில்
விளம்பரம் செய்க!

ஆசிரியரும் வெளியிடுபவரும்: சே. மு. சுல்தான் பக்தாதி, அச்சிட்டது: இஸ்லாமியா அச்சகம். பாலக்கரை. திருச்சிராப்பள்ளி